பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 09-2025 MONDAY 6.30 PM

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி சீனாவில் அரசுமுறைப்பயணத்தை முடித்துக்கொண்டு புதுதில்லி புறப்பட்டார்.

2. ஆசிரியர் பணியை தொடர தகுதித் தேர்வு கட்டாயம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

3. விவசாயிகள் நலனுக்கு எதிரான எந்தவொரு திட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று தமிழக அரசு கூறியுள்ளது.

4. வங்கக்கடலில் அடுத்த 24 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அமெரிக்க ஓபன் ஜுனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள்

<<<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, சீனாவில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புதுதில்லி புறப்பட்டார்.

இந்த பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

*ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்றதை சுட்டிக்காட்டிய அவர், பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் விரிவாக பேச்சு நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக சீன அதிபர் திரு Xi Jinping மற்றும் அந்நாட்டு அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

<<<<<<<<>>>>>

*ஆசிரியர் பணியை தொடர, தகுதித் தேர்வு கட்டாயம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.*

*இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணை செய்த நீதிபதிகள் திரு Dipankar Datta, திரு Augustine George Masih அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.*

*ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ள ஆசிரியர்களுக்கு மட்டுமே இது பொருந்தும் என்றும் அந்த உத்தரவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.*

*ஆசிரியர் தகுதி தேர்வில் வெற்றி பெறாதவர்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும், அல்லது கட்டாய ஓய்வு பெறலாம் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சிறுபான்மையின நலப்பள்ளிகளுக்கு மாநில அரசுகள் இதனை கட்டாயமாக்கலாமா என்பது தொடர்பான அம்சங்களை கூடுதல் நீதிபதிகளை கொண்ட அமர்வு விசாரிக்க பரிந்துரைப்பதாகவும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

<<<<<<<<>>>>>

விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு திட்டத்திற்கும் தமிழக அரசு அனுமதி அளிக்காது என்று மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் வளர்ச்சித்திட்டப்பணிகளை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(Sound Byte – கே கே எஸ் எஸ் ஆர் - 44 Sec. )*

<<<<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டால் தொழில் முதலீடுகள் தானாக வரும் என்று பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பெற்ற பின்னர் சட்டம் – ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளது.

இதன் காரணமாக முதலமைச்சர் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டாலும் முதலீடுகளை பெற இயலாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>

திமுக தலைமையிலான கூட்டணியில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தங்கள் கூட்டணி வலிமையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

மாநிலத்தில் பொறுப்பு டிஜிபி-க்கள் நியமிக்கப்படுவது புதிதல்ல என்றும் திரு செல்வப்பெருந்தகை கூறினார்.

<<<<<<<<>>>>>

நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகனின் ஏற்பாட்டின் பேரில் இந்த மாவட்டத்தை சேர்ந்த சிறு-குறு விவசாயிகள் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா-வை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்தனர்.

இவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர்கள் உறுதியளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<>>>>>

குடிமைப்பணி தேர்வில் வெற்றிவாய்ப்பை நூலிழையில் தவற விட்டவர்களுக்கென உருவாக்கப்பட்டுள்ள டிஜிட்டல் தளம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த டிஜிட்டல் தளத்தை உருவாக்கிய மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக சேலத்தை சேர்ந்த ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – சுப்புலட்சுமி - 47 Sec. )*

<<<<<<<<>>>>>

*வங்கக்கடலில் அடுத்த 24 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் – 60 Sec.)*

*இதற்கிடையே, சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் திறக்கப்பட உள்ளதால் காவிரி கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள ஆபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(Sound Byte – விஜய்குமார் –38 Sec.)*

*<<<<<<<<>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

*நாமக்கல் மாவட்டம் சிங்களாந்தபுரத்தில் இன்று நடைபெற்ற கல்விக்கடன் முகாமில் ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி ஆய்வு மேற்கொண்டார்.*

-------------

*தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ், ராணிப்பேட்டை மாவட்டம் பூங்கோடு கிராமத்தில் ஆட்சியர் திருமதி சந்திரகலா தலைமையில் தூய்மைப்பணிகள் நடைபெற்றன.*

--------------------

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.*

-----------

அரியலூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான செஸ் போட்டியில், அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

-----------------

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் தொழில்நுட்ப பராமரிப்புப்பணிகளுக்காக மின் உற்பத்தி இரண்டாவது பிரிவில் 75 நாட்களுக்கு நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------

கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பு அய்யா வைகுண்ட தலைமை பதி ஆவணி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<<<>>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

அமெரிக்க ஓபன் ஜுனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 7-6, 6-3 என்ற செட் கணக்கில் சீனாவின் Wei Zhang Qian-ஐவென்றார்

--------------

ஐக்கிய அரபு எமிரேட்டின் Fujairah -ல் நடைபெற்ற சர்வதேச ஜுனியர் செஸ் போட்டியில் இந்தியாவின் Pranav Venkatesh பட்டம் வென்றார்.

இப்போட்டியின் ஒன்பதாவது சுற்று முடிவில் ஏழு புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

--------------

*பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச ஜூனியர் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் Bhavya Chhabra முதலிடத்தை பிடித்துள்ளார்.*

-------------

*செக் குடியரசில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

------------

*உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கான பரிசுத்தொகை 297 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.*

*இதன்படி, வெற்றிபெறும் அணிக்கு 39 கோடியே 55 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது.*

*<<<<<<<>>>>>*